**சிசி.146/2018 அசா.5 ரவிக்குமார் த.பெ. கருப்பையா தேதி 04.10.2023**

(1 முதல் 5 எதிரிகள் ஆஜர் இல்லை. 1 முதல் 5 எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குவிமுச பிரிவு 317 ன் கீழான மனு அனுமதிக்கப்பட்டது)
(எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 311 ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டுள்ளார்)

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

அசா.1 ராணி எனக்கு உறவினர். அவரது திருமணத்தில் நான் கலந்துகொண்டேன். திருமணத்திற்கு பின்னர் அசா.1 ராணியும், 1 வது எதிரி புண்ணியமூர்த்தியும் சந்தோசமாகத்தான் குடும்பம் நடத்திவந்தார்கள். அவர்கள் இருவரும் சென்னையில் வசித்து வந்தார்கள். அசா.1 ராணி சென்னையில் 1 வது எதிரியுடன் வசித்தபோது அவரது மாமியாரிடம் சொத்து கேட்டு பிரச்சனை ஏற்பட்டதால் அசா.1 ராணியை அவரது தகப்பனார் தனது ஊருக்கு அழைத்து வந்த விபரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல தெரியாது. அசா.1 ராணி தனது தாயார் வீட்டில் இருந்தபோது அவரது கணவரான 1 வது எதிரி தன்னுடன் அசா.1 ராணியை சேர்த்து வைக்குமாறு கூறி பலமுறை பேச்சு வார்த்தை நடத்தினார் என்றால் அசா.1 ராணி அவரது கணவருடன் சண்டை போட்டு அவரது தாயார் வீட்டில் வசித்தார் என்பது எனக்கு தெரியாது.

2. நான் முதல்விசாரணை சாட்சியத்தில் அசா.1 ராணியிடம் எதிரி புண்ணியமூர்த்தி அடிக்கடி அதிகமாக பணம் கேட்கிறார் என்று பிரச்சனை ஏற்பட்டதாகவும் அசா.1 ராணியும் எதிரி புண்ணியமூர்த்தியும் பிரிந்திருப்பதாக கேள்விப்பட்டேன் என்று சொல்லியிருப்பது உண்மையில்லை என்று சொன்னால் சரியல்ல. 1 வது எதிரி புண்ணியமூர்த்தி தனது திருமணத்திற்கு பின்னர் அசா.1 ராணியுடன் சேர்ந்து வாழ்ந்த காலம்முதல் இதுநாள்வரை சென்னையில்தான் வசித்து வருகிறார் என்றால் அசா.1 ராணியும் 1 வது எதிரியும் சேர்ந்து வாழ்ந்தபோது சென்னையில்தான் வசித்தார்கள், தற்போது 1 வது எதிரி எங்கு வசிக்கிறார் என்பது எனக்கு தெரியாது. அசா.1 ராணியும் 1 வது எதிரியும் சந்தோசமாக வாழ்ந்துவந்தார்கள் என்ற விபரம் மட்டும்தான் எனக்கு தெரியும் என்றாலும் மற்ற விபரங்கள் எனக்கு தெரியாது என்றாலும் சரியல்ல, 1 வது எதிரி 2 வது திருமணம் செய்துகொண்ட தகவல் அசா.1 ராணிக்கு தெரியவந்த பின்னர்தான் அது பற்றி அசா.1 மகளிர் காவல்நிலையத்தில் புகார் அளித்தார்.

3. 1 வது எதிரி புண்ணியமூர்த்தி 2 வது திருமணம் செய்யப்போவதாக அச்சிடப்பட்ட திருமண அழைப்பிதழ் எனக்கு வழங்கப்படவில்லை என்றால் சரிதான், எனது பக்கத்துவீட்டுக்காரர் தனது மகளை 1 வது எதிரி புண்ணியமூர்த்தி 2 வதாக திருமணம் செய்துகொள்ள பார்த்துள்ள பெண்ணின் ஊரான குடிகாட்டிற்கு கொடுத்துள்ளார். அந்த வகையில் எனது பக்கத்துவீட்டுக்காரருக்கு 1 வது எதிரியின் 2 வது திருமணம் பற்றிய திருமண

அழைப்பிதழ் கொடுக்கப்பட்டிருந்தது. அந்த திருமண அழைப்பிதழைத்தான் நான் பார்த்தேன். மேற்படி விபரத்தை போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் இல்லை. 1 வது எதிரியின் 2 வது திருமணத்திற்கு அச்சடிக்கப்பட்டதாக கூறப்படும் திருமண அழைப்பிதழ் எத்தனை தாள்களில் இருந்தது, அதன் நிறம் என்ன, அதில் என்னென்ன பெயர்கள் அச்சிடப்பட்டிருந்தது என்பது குறித்து தெரியுமா என்றால் திருமண அழைப்பிதழில் சாமி படம் அச்சிடப்பட்டிருந்தது, பெயர்கள் மற்றும் அழைப்பிதழின் நிறம் பற்றிய விபரம் ஞாபகம் இல்லை.

4. 1 வது எதிரியின் 2 வது திருமணத்திற்கு அச்சடிக்கப்பட்டதாக கூறப்படும் திருமண அழைப்பிதழை நான் உண்மையில் பார்த்திருந்தால் அதன் நிறம் மற்றும் அதில் அச்சிடப்பட்டிருந்த பெயர்கள் பற்றிய விபரத்தினை என்னால் கூற முடியும் என்று சொன்னால் 2017 ம் ஆண்டு 1 வது எதிரிக்கு 2 வது திருமணம் நடந்தது. அதனால் திருமண அழைப்பிதழின் பெயர் மற்றும் விபரங்கள் தற்போது ஞாபகத்தில் இல்லை. அசா.1 ராணி காவல்நிலையத்தில் புகார் அளித்தபோது உறவினர் என்ற அடிப்படையில் நான் உடன்சென்றேன் என்றால் சரியல்ல. ஊர் பஞ்சாயத்தார் என்ற அடிப்படையில் நான் சென்றேன். எந்த தேதியில் அசா.1 ராணி புகார் அளித்தார் என்றால் தேதி சரியாக ஞாபகம் இல்லை. புகார் அளித்த அன்று இருதரப்பினரையும் வைத்து பேசினோம். பேச்சுவார்த்தையின்போது 1 வது எதிரி அசா.1 ராணியை தன்னுடன் சேர்ந்து வாழ அழைத்தபோது அசா.1 ராணி அதற்கு மறுத்துவிட்டார் என்றால் சரியல்ல. 1 வது எதிரிதான் அசா.1 ராணியை பிரிந்து செல்லுமாறு கூறினார்.

5. காவல்நிலையத்தில் புகார் அளித்த அன்று இருதரப்பும் பேச்சுவார்த்தை நடத்தினர், அதன்பின்னர் இருதரப்பினருக்கும் இடையே நடந்த பேச்சு வார்த்தையில் நான் கலந்துகொள்ளவில்லை என்றால் அதன்பின்னர் அசா.1 ராணி கொடுத்த புகாரில் வழக்கு பதிவு செய்யப்பட்டது, இருவரும் பிரிந்துவிட்டனர், பேச்சுவார்த்தை நடத்தவில்லை. புகார் அளித்த அன்று போலீசார் என்னை விசாரணை செய்தபின்னர் மீண்டும் வழக்கு சம்மந்தமாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். புகார் அளித்த அன்று அசா.1 ராணியையும் 1 வது எதிரியையும் மட்டுமே போலீசார் விசாரித்தனர், என்னை விசாரிக்கவில்லை. நான் முதல்விசாரணையில் சொன்னதுபோல் சம்பவம் நடக்கவில்லை என்றாலும் அசா.1 எனது உறவினர் என்பதால் நடக்காத சம்பவத்தினை நடந்ததாக கேள்விப்பட்டேன் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் 1 வது எதிரியின் 2 வது திருமணத்திற்கான அழைப்பிதழ் என்று கூறப்படும் அழைப்பிதழை நான் பார்க்கவில்லை என்றாலும் 1 வது எதிரி 2 வது திருமணம் செய்துகொண்டார் என்று கூறுவதிலும் உண்மை இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**